1978 மார்ச் 1]

அரசினர் நலப்பள்ளி, கொண்டல்.

* 336. வின.—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் —

கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்தில், கொண்டல் அரசினர் நலப்பள்ளியை உயர் தொடக்கப் பள்ளியாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கொண்டலில் உள்ள அரசினர் நலப் பள்ளி 1974-1975 முதல் உயர் தொடக்கப் பள்ளியாக இயங்கி வருகிறது.

திரு. கே. சுப்பிரவேலு : தலைவரவர்களே, சீர்காழி வட்டத்தில் கொண்டலில் ஆரம்பப் பள்ளியாக இருந்த பள்ளி உயர்நிலைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, இடையிலே இரண்டாண்டு அதற்கு அனுமதி கிடைக்காமல் ஆகிவிட்டது. இப்போது மீண்டும் ஆரம்பிப்பதாகச் சொல்கிறார்கள். அதிலே எத்தனை ஆசிரியர்கள், எந்த வகுப்புவரை நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கிருந்த மாவட்ட நல அதிகாரி அவர்கள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமலேயே அந்தப் பணியைச் செய்து விட்டார்கள். ஆகவேதான் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது 7-வது வகுப்புவரை தொடங்க அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது . கல்வித் துறையைக் கலந்தாலோசித்து, இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேங்கைவாடி அரிசன குடியிருப்பு

* 337 வின.—திரு. வ. துலுக்காணம் :— மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில், வேங்கைவாடி அரிசன் காலனியில் அரிசனநல வீடு கட்டும் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டி பாதி கட்டடங்களாக உள்ளது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?